**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 241/2002**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 22.08.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : மனோகரன் Father's Name :

துவக்க நேரம்: 01.01 P.M

சாட்சி முன்னிலையானார், உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>

1) 1-பிரதிவாதியின் தந்தை பெயர் கருப்பண்ணன் என்றால் சரிதான். கருப்பண்ணன் என்பவருக்கு 1-ம் பிரதிவாதி அம்பாயிரம், நல்லம்மாள், களியன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் நல்லம்மாள் என்பவர் பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது.

2) என்னிடம் காட்டப்படும் கடந்த 05.01.2024 தேதியிட்ட கிரையப்பத்திரத்தில் களியன் மனைவி புஷ்பா என்பவருக்கு கருப்பண்ணன் மகளும், செல்லமுத்து மனைவியுமான நல்லம்மாள் என்பவர் எழுதிக்கொடுத்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது உண்மைத்தன்மை பற்றி எனக்கு தெரியாது. கருப்பண்ணன் வாரிசுகள் நல்லம்மாள், களியன் ஆகிய இருவரையும் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

3) ச.எண்.86/5-ல் கருப்பண்ணன் வாரிசுகள் மூவருக்கும் தலா 30-3/4 செண்ட் பாத்தியப்பட்டது என்றால் தவறு. மேற்படி கருப்பண்ணனின் வாரிசுகள் பற்றியும், சொத்து விவரமும் பற்றியும் எந்த விவரமும் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் பிரதிவாதிகள் யாரும் அரசுப் பணியிலேயோ அல்லது தனியார் பணியிலேயோ

இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் அந்த ஊர்யிலேயே குடியில்லை. பிரதிவாதிகள் அனைவரும் கூலிவேலைதான் செய்கிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் யாரும் ஊர்தலைவரோ அல்லது கவுன்சிலர்களவோ இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4) நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் கிராம பஞ்சாயத்தார்கள்மூலம் பேச்சுவார்த்தை நடத்தியதாக குறிப்பிட்டுள்ள நிலையில் யார் யார் முன்னிலையில் எந்த தேதியில் அவ்வாறு பேச்சுவார்த்தை நடைபெற்றது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். கடந்த 01.09.2002 அன்று வாதிகளாகிய எங்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் எந்த பிரச்சினையும் நடைபெறவில்லை என்பதால்தான் அது சம்மந்தமான புகார் மற்றும் பேச்சுவார்த்தை பஞ்சாயத்தார் முன்னிலையில் எந்த தேதியில் யார் யார் முன்னிலையில் நடைபெற்றது என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல.

5) எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வீட்டுவரி ரசீதில் குறிப்பிட்டுள்ளவாறு அந்த இடத்தில் எந்த குடியிருப்பும் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தனது வரைபடத்திலும் மற்றும் அறிக்கையிலும் மேற்படி வயலில் Hollow brick கற்களால் கட்டப்பட்ட ஒரு வில்லைக்கொட்டாயும், அதன் நீளம் 17-1/2 அடி என்றும், மேற்படி வில்லைக்கொட்டாய் இரண்டு அறைகளாக பிரிக்கப்பட்டு மேற்குபுறத்தில் உள்ள அறை நீளமாகவும், அதன் உட்பகுதியும் விவசாய உபகரணங்கள் மற்றும் Electric பொருட்கள் இருந்ததாகவும், கிழக்குப்புற அறை நீளம் குறைவாகவும், அதன் உட்பகுதியில் மின்மோட்டார், மெயின் ஸ்விட்சு பெட்டிகள் இருந்ததாகவும், குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எனவே, தாவா சொத்தில் குடியிருப்பு வீடு இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக வீடு இருந்ததாக குறிப்பிட்டு போலியான வீட்டுவரி ரசீதுகள் தயார் செய்து ஆவணங்களாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6) பிரதிவாதிகள் எங்களது பாகத்தை விலைக்கு கேட்டதாக குறிப்பிட்டுள்ள நிலையில் எந்த தேதியில், என்ன விலைக்கு கேட்டார்கள் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அவ்வாறு பிரதிவாதிகள் என்னிடம் நிலத்தை கேட்காததால்தான் அதன் தேதியை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வசதியில்லாத விவசாயிகள் என்றாலும் வாதிகளாகிய நாங்கள் அவரது நிலத்தை அபகரிக்கும் எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

7) பிரதிவாதிகளின் நிலமானது எங்கள் நிலத்திற்கு முன்பகுதியில் அமைந்துள்ளதால் அவர்களது நிலத்தை வாங்கிக்கொண்டால், எங்களுக்கு வசதியாக இருக்கும் என்ற காரணத்தால், பிரதிவாதிகள் மீது இந்த வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல, எங்கள் இருவரது நிலத்திற்கு வடக்கிலும் ரோடு அமைந்துள்ளதால் எங்களது நிலம் முன்பகுதியில் அமைந்துள்ளது என்று சொல்வது தவறு. மேலும் பிரதிவாதிகளிடம் உள்ள குறைவான நிலத்தையும் நாங்களே வாங்கிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் அவ்வாறு வழக்கு தாக்கல் செய்து அவர்களுக்கு நெருக்கடி ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல.

8) நான் சொல்வது போல் ச.எண்.86/1-ல் போர்வெல் இருந்திருந்தால் நீதிமன்ற ஆணையர் மூலம் தாவா சொத்தை அளவீடு செய்யும்போது நில அளவையர் மூலம் துல்லியமாக அளவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருப்போம் என்றால் சரியல்ல. அவ்வாறு பிரதிவாதிகள் நிலஅளவையர் மூலம் தாவா சொத்தை அளவீடு செய்ய வேண்டுமென தங்களது கூடுதல் பதிலுரையில் சொல்லியபோதிலும், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல, மேலும் ச.எண்.86/5-ல் உள்ள நிலம் பிரதிவாதிகள் பெயரில் இல்லாத காரணத்தால்தான்

நான் நில அளவையர்மூலம் அளவீடு செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. நான் சொல்வது தவறு என்றாலும் வழக்குரை, நிரூபண வாக்குமூலம், குறுக்கு விசாரணையில் ச.எண்.86/5-ல் உள்ள நிலம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று கூறிவிட்டு தற்பொழுது முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9) நான் எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளவாறு எந்த வழக்குமூலமும் ஏற்படவில்லை என்றாலும் அவ்வாறு நடந்திருந்தால் அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, நான் கூறிய தேதியில் சம்பவம் நடைபெற்றது. நான் தாக்கல் செய்துள்ள வழக்கானது பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 01.46 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif(F.A.C), Attur.

Typed by Selvi. C. Sasikala – O.S. No. 241/2002, Dt.22.08.2025.